1979 ஏப்ரல் 26]

திரு. வ. மு. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னென்ன பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அறிந்த வரையில் சிமிண்ட் மூட்டைகளும், இரும்புக் கம்பிகளும் அடித்துச் செல்லப்பட்டிருப்பதாக சொல்லுகிறார்கள். இது உண்மையிலேயே வெள்ளப்பெருக்கினால் தான் அடித்துச் செல்லப்பட்டதா. அல்லது வேறு ஏதாவது மோசடி நடந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த விவரங்களை எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். சிமிண்ட் மூட்டைகளும் இரும்பு கம்பிகளும் அடித்து செல்லப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே பெரும் மழை பெய்தது என்பது உண்மை, அந்த வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருப்பது உண்மையாக இருக்கலாம்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் தந்திருக்கின்ற அறிக்கையின் மூலம் இந்த விவரத்தை பதிலில் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி மறுபடியும் விசாரணை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட நேரத்தில் தான் இது நடந்தது என்று அதிகாரிகள் அனுப்பியிருக்கும் தகவல்களின் அடிப்படையில் தான் இந்தப் பதிலை கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக தகவல் ஏதாவது இருந்து, அதை எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக இந்த அரசாங்கம் அதைப் பற்றி மறுபரிசீலனை செய்து விசாரணை நடத்தும்.

சென்னையில் ரிக்ஷாக்களுக்கு மோட்டார்கள் பொருத்தும் திட்டம்.

*வினா எண். 836—திரு. சு. பாலன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தற்போது சென்னையில் ஓடும் எல்லா ரிக்ஷாக்களுக்கும் மோட்டார் பொருத்தி ஓட்டும் முறையை சர்க்கார் அமுல் படுத்த உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : புதிதாக சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்காமல், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மட்டுமே உரிமம் கொடுத்து படிப்படியாக மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்களையே நடைமுறைக்கு கொண்டுவர உத்தேசித்துள்ளது.